**Judicial Form No.53**
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
**(Chapter XXII, Cr.P.C.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTARATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 106 of 2019

Depositions of DW - 1 witness for ________ Prosecution / Defence / Court

Name : ராஜேஷ்குமார்
Father's Name : த/பெ. ராமானுஜம்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of October 2022.

**முதல் விசாரணை –**

1. நான் இவ்வழக்கின் எதிரியாவேன். இவ்வழக்கின் மனுதாரரான ஸ்ரீநிவாசனை யார் என்று எனக்கு தெரியாது. எனக்கும் அவருக்கும் இடையே எவ்வித வரவு செலவும் கிடையாது. நான் அவரிடமிருந்து எவ்வித பணமும் பெறவில்லை.

2. தீபாளப்பட்டியை சேர்ந்த சுந்தரராஜனும் நானும் நண்பர்கள் ஆவோம். நான் மேற்படி சுந்தராஜனிடம் தான் வரவு செலவு செய்து வந்தேன். எனக்கு பங்கு சந்தையில் முதலீடு செய்வதற்கு எனக்கு பணம் தேவைப்பட்டதால் சுந்தரராஜன் எனக்கு தேவைப்பட்ட பணத்தை அவருடைய மகளான சுதாவிடமிருந்து பெற்று கொடுத்தார். அவருடைய மகள் வட்டி தொழில் செய்வதாகவும் மேலும் சீட்டு பிடிப்பதாகவும் கூறினார். அதனால் பெரும் தொகைக்கு ஈடாக ஆவணம் கொடுக்கவேண்டும் என்று கூறினார்.

3. அதனால் நான் தம்பியினுடைய காட்டிற்குடைய பத்திரம், பாட்டியின் உயில் சாசனம், திருவேங்கடசாமி என்பவருடைய ஆவணம், 20, 50, 100 ரூபாய்க்கான முத்திரைதாள்கள் ஆறு மற்றும் 20 காசோலைகள் ஆகியவற்றை கொடுத்துவிட்டு ரூ.4 லட்சத்தினை சுதாவிடம்

இருந்து பெற்றேன். அத்தொகைக்கு சுமார் 1-1/2 வருடங்களாக வட்டி செலுத்தி வந்தேன். என்னுடைய பங்கு சந்தை தொழில் மற்றும் விவசாயத்தில் பிரச்சனை ஏற்பட்டதால் என்னால் 6 மாதங்களுக்கு வட்டி செலுத்த இயலவில்லை.

4. அதனால் சுதாவும் அவருடைய கணவரும் என்னுடைய வீட்டிற்கு வந்திருந்தார்கள். அவர்கள் நடத்திய சீட்டு கம்பெனியில் பிரச்சனை ஏற்பட்டு விட்டதாகவும் அதனால் முழு தொகையையும் திருப்பி கொடுக்குமாறு என்னை வற்புறுத்தினார்கள். நான் திடீரென்று பணத்தை ஏற்பாடு செய்ய இயலாது என்றும் ஆவணங்கள் அனைத்தும் உங்களிடம் உள்ளது என்றும் 6 மாதகால அவகாசம் கொடுத்தால் பணத்தை ஏற்பாடு செய்ய இயலும் என்று கூறினேன்.

5. அதன்பின்னர் 10 நாட்கள் கழித்து கோயமுத்தூரில் இருநது காங்கேயம் என்பவர் என்னடைய வீட்டிற்கு வந்திருந்தார். அவர் நான் சுதாவிற்கு கொடுத்த ஆவணங்கள் மற்றும் சிறிது காசோலைகளை என்னிடம் காண்பித்தார். மேலும் சுதா நடத்தி வந்த சீட்டில் பிரச்சனை ஏற்பட்டு விட்டது என்றும் எனவே ஊர் மக்கள் ஒன்று கூடி சுதாவிடமிருந்து பணத்தை பெற்று தர காங்கேயம் மற்றும் அவருடன் வந்திருந்தவர்களை நியமித்திருப்பதாக கூறினார்.

6. மேற்படி நபர்கள் கூறியவற்றை நான் நம்பாமல் சுதாவை தொடர்பு கொண்டு கேட்டதற்கு அவர் சீட்டு நடத்த முடியாததால் அவருடைய வீடு, கார் மற்றும் இருசக்கர வாகனங்களை அவர்கள் எடுத்து கொண்டதாகவும், மேலும் பிரச்சனை செய்தவர்கள் அவர் வீட்டில் வைத்திருந்த ஆவணங்களையும் எடுத்து சென்றுவிட்டதாகவும், மேலும் காவல் நிலையத்தில் விசாரணை நிலுவையில் இருப்பதாகவும், தெரிவித்தார்.

7. என்னுடைய வீட்டிற்கு வந்த காங்கேயம் மற்றும் ஊர்காரர்கள் பணத்தை உடனே கொடுக்கவில்லை என்றாலும் அதற்குரிய பாதுகாப்பை செய்து கொடுக்குமாறு கூறினார்கள். அவர்கள் கையில் வைத்திருந்த என்னுடைய தம்பிக்கு உரித்தான சொத்து குறித்து அடமானம் செய்து கொடுக்குமாறு கூறினார்கள். வெளிநாட்டிலிருந்த என்னுடைய தம்பியை வரச்சொல்லி 09.08.2017 ம் தேதியன்று அடமான பத்திரம் ஒன்று எழுதி கொடுத்தேன். தற்பொழுது அந்த அடமான பத்திரத்தின் அசல் வி. சின்னசாமி மற்றும் கே. சின்னசாமி ஆகியோர் வசம் உள்ளது.

8. மேற்படி பத்திரம் பதிவு செய்யும் சமயத்தில் நான் கொடுக்கவேண்டிய அசல் தொகை ரூ.4 லட்சத்திற்கு 6 மாத வட்டி தொகை ரூ.50 ஆயிரம் ஆக மொத்தம் ரூ.4,50,000/- கொடுக்கவேண்டியிருந்தது. நான் சுதாவிடம் அளித்த திருவேங்கடம் என்பவருடைய பத்திரத்தினை பயன்படுத்தி சுதா வேறு ஒரு நபரிடம் இருந்து ரூ.1-1/2 லட்சம் கடனாக பெற்றிருநதார். ஆக சுதாவினுடைய மேற்படி கடன் தொகை மற்றும் என்னுடைய கடன் தொகை சேர்த்து ரூ.6 லட்சத்திற்கு பதிலாக செக்யூரிட்டிக்காக ரூ.14,65,000/-க்கு அடமானம் போட்டு கொடுக்குமாறு கூறினார்கள்.

9. அதற்கு நான் ஒப்பு கொள்ளாததால் ஊர் பொதுமக்களுக்காக அவர்கள் முந்நின்று

பணத்தை வசூல் செய்வதாகவும், மேலும் அவர்கள் எனக்கு உறுதிமொழி பத்திரம் எழுதி கொடுப்பதாகவும் கூறினார்கள். **(அவர்கள் எழுதி கொடுத்த உறுதிமொழி பத்திரத்தின் நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேலும் 6 மாதத்திற்குள் நான் கொடுக்க வேண்டிய 6 லட்சத்தினை திருப்பி கொடுத்துவிடும் பட்சத்தில் 6 மாதத்திற்குள் வட்டி எதுவும் வேண்டாம் என்றும், மேலும் பணத்தை திருப்பி கொடுக்கும் பட்சத்தில் ஆவணங்களை திருப்பி கொடுத்துவிடுவதாக அல்லது அதற்கு முன்னரே சுதாவினுடைய சொத்துவிற்கப்படும் பட்சத்தில் என்னுடைய ஆவணங்களை திருப்பி கொடுக்குமாறும் கூறினார்கள்.

10. 2 மாதங்கள் கழித்து என்னுடைய ஆவணங்களை திருப்பி கேட்டதற்கு என்னை சுதாவிடம் பேசிக்கொள்ளுமாறு கூறினார்கள். ஏனென்று கேட்டதற்கு சுதா நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துவிட்டதாக கூறினார்கள். வழக்கு முடிந்த என்னுடைய ஆவணங்களை கொடுப்பதாக கூறினார்கள். இவ்வழக்கு காசோலையை நான் சுதாவிடம் தான் கொடுத்திருந்தேன். சுதாவிடம் நான் ஸ்ரீநிவாசன் எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருப்பதாக கூறியதற்கு சுதா தனக்கும் ஸ்ரீநிவாசனுக்கம் வரவு செலவு இருப்பதாகவும், ஸ்ரீநிவாசனுக்கு கொடுக்கவேண்டிய தொகையை கொடுத்துவிட்டு இவ்வழக்கை முடித்து கொள்வதாகவும் கூறினார்.

11. நான் பங்கு சந்தையில் ஒருவரை நம்பி பணம் போட்டு ஏமாந்துவிட்டேன். அது சம்பந்தமாக மாவட்ட கமிஷ்ணர் அலுவலத்தில் புகார் அளித்து தற்பொழுது அவ்வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. மேலும் சுதாவிற்கு எதிராக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் 02.09.2021 ம் தேதி புகார் ஒன்று அளித்தேன். **(புகாரின் கை நகல் எ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் நீதிமன்றத்தின் மூலம் பார்த்து கொள்ளுமாறு கூறிவிட்டார்கள். மேற்படி கே. சின்னசாமி, வி. சின்னசாமி மற்றும் சுதா ஆகியோர்களை விசாரித்தார் வழக்கின் உண்மை நிலை தெரியவரும். திருவேங்கடம் இறந்து விட்டதால் அவருடைய மகள் 1-1/2 லட்சம் ரூபாயை ஸ்ரீநிவாசனிடம் திருப்பி கொடுத்துவிட்டு ஆவணத்தை திருப்பி பெற்று விட்டார்.

<u>குறுக்குவிசாரணை</u>

மனுதாரரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2022.10.11 17:20:01 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்.**